**மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) செயல்முறைகள்**

**பிறப்பிப்பவர் : திரு.து.முத்துவடிவேலு**

ப.மு.அ3 /13423/2021 நாள்: 31-05-2024.

| | |
|---|---|
| பொருள் : | பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - மயிலாடுதுறை மாவட்ட வருவாய் அலகு - **செல்வி.த.சிந்துமாங்கனி த.பெ. தங்கராஜ்** - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது. |
| பார்வை : | 1. மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) செயல்முறைகள் ந.க.13423/2021/அ3, நாள். 28-02-2023.<br>2. அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டத் (க்யூ.1) துறை, நாள்:08.03.2023.<br>3. அரசுக் கடித எண்.5532/G2/2023, மனிதவள மேலாண்மைத்(G) துறை, நாள்:20.09.2023<br>4. அரசுக் கடிதம் 1D எண்.850, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள்:08.12.2023<br>5. அரசுக் கடிதம் (1D) எண்.900, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள்:26.12.2023<br>6. அரசுக் கடிதம் (1D) எண்.13, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, பணி-9(2) பிரிவு, நாள்:18.01.2024<br>7. அரசுக் கடிதம் (1D) எண்.64, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள்:18.01.2024<br>8. கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம் கடித எண்.ஆ.கு.3/4600/2024. நாள்: 20.02.2024 |

@@@

**ஆணை :**

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டம், எருக்கூர் அரசு ஆதிதிராவிடர் நல தொடக்கப்பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து பணியிடையே 20.06.2021 அன்று காலஞ்சென்ற திருமதி.த.சீதாலெட்சுமி என்பவரின் கணவர் **திரு.தங்கராஜ் என்பவர்** தனது மகள் செல்வி.த.சிந்துமாங்கனி என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி **13.07.2021** அன்று மனு அளித்துள்ளார். மேலும், காலஞ்சென்ற அரசு ஊழியரின் மகள் செல்வி.த.சிந்துமாங்கனி என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி **28.03.2022** அன்று மனு அளித்துள்ளார். மேற்படி மனு மூன்றாண்டுகளுக்குள் உரிய நாளில் பெறப்பட்டுள்ளது

தனியர் செல்வி.த.சிந்துமாங்கனி கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கிட கோரி மனு அளிக்கப்பட்ட நாளில் தனியரின் வயது - 27 ஆகும். தனியர் கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி விண்ணப்பம் அளித்த நாளில் உரிய கல்வித்தகுதியான பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார்.

3) மேலும், சீர்காழி வருவாய் வட்டாட்சியரின் ஒருங்கிணைந்த சான்றிதழ் எண். ப.மு.6609/2022/ஆ3, நாள்.05.01.2023-இல், காலஞ்சென்ற அரசு ஊழியர் திருமதி.சீத்தாலட்சுமி என்பவரின் குடும்பத்தில் அவரது மகள் திருமதி. மனோஜா என்பவர் 21.09.2020 முதல் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு இளநிலை உதவியாளராக பள்ளிக்கல்வித்துறையில் பணிபுரிந்து வருகிறார் எனவும், தற்போது தஞ்சாவூர் மாவட்டத்தில் தனது கணவருடன் வசித்து வருகின்றார் எனவும், திருமதிமனோஜா என்பவர் மூலம் இவர்களுக்கு எந்தவித ஆதாயமும் கிடையாது எனவும், இவரைத் தவிர வேறு யாரும் இக்குடும்பத்தில் அரசுத்துறையிலோ அல்லது தனியார் துறையிலோ பணிப்புரியவில்லை எனவும் தெரிவித்துள்ளார். மேலும், காலஞ்சென்ற அரசு ஊழியரின் மகள் செல்வி.த.சிந்துமாங்கனி என்பவர் திருமணமாகாதவர் எனவும், இறந்தவரின் குடும்பத்திற்கு அவரது ஊதியத்தினை தவிர வேறு வருமானம் எதுவும் இல்லை எனவும் அவரது மறைவிற்கு பின் அவரது கணவர் திரு.தங்கராஜ் என்பவர் மறுமணம் ஏதும் செய்துகொள்ளவில்லை எனவும், காலஞ்சென்ற அரசுஊழியரின் மறைவிற்கு பின் குடும்பம் வறிய நிலையில் உள்ளது எனவும் சீர்காழி வட்டாட்சியர் தெரிவித்துள்ளார்.

இதனைத்தொடர்ந்து தனியருக்கு பார்வை-(1)-இல் காணும் செயல்முறை ஆணையின்படி இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு, தனியர் **03.-03-2023 பிற்பகல்** முதல் பணியேற்று, தற்போது மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறார்.

எனவே, மயிலாடுதுறை மாவட்ட வருவாய் அலகில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட செல்வி. த.சிந்துமாங்கனி என்பவருக்கு உரிய கல்வி, வயது மற்றும் வறியநிலைத் தகுதிகளின் அடிப்படையிலேயே இளநிலை வருவாய் ஆய்வாளர்

நிலையில் பார்வை-(1)-இல் காணும் செயல்முறைஆணையின்படி பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளதால், **பார்வை (2)**-இல் காணும் அரசாணை, **பார்வை (3)**-இல் காணும் அரசு, மனிதவள மேலாண்மைத்துறையின் கடிதத்தில் உள்ள வழிகாட்டுதல்கள் மற்றும் **பார்வை (4) முதல் (8) வரை** காணும் அரசுக்கடிதங்களில் வழங்கப்பட்டுள்ள தெளிவுரைகள் ஆகியவற்றின் அடிப்படையில் தனியரின் பணியினை இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் தனியர் பணியில் சேர்ந்த நாளான **03.03.2023 பிற்பகல்** முதல் பணிவரன் முறை செய்து ஆணையிடப்படுகிறது.

இவ்வாணையினை தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு தொடர்புடைய கட்டுப்பாட்டு அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(பொது),
மயிலாடுதுறை.

**பெறுநர்**
செல்வி.த.சிந்துமாங்கனி,
இளநிலை வருவாய் ஆய்வாளர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
மயிலாடுதுறை.

**நகல்:**

1. கூடுதல் தலைமைச் செயலர்/ வருவாய் நிருவாக ஆணையர், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. இருப்பு கோப்புக்கு.